2005 மார்ச் 16]

அரசாணை தடையாக இருக்கிறது என்ற பதிலையும் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், மீண்டும் அது குறித்து அரசுத் துறை அதிகாரிகளிடம் ஆய்வு செய்யச் சொல்கிறோம். தேவைப்பட்டால் மீண்டும் அதில் ஓர் அறிக்கையைப் பெற்று அதன் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி காசாம்பு பூமாலை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் பணிமனை தொடங்குவதற்காக இடமெல்லாம் தேர்ந்தெடுத்தார்கள். இந்த ஆண்டாவது இந்தப் பணிமனையைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள் அம்மா. வினா எண் 163, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

163—

சீரமைப்புப் பள்ளி

***48403—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 மார்ச் 16

திரு. கா.தி. இளையகண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கள்ளர் சமுதாய மக்கள் பொருளாதார வசதியைப் பெறுவதற்கும், கல்வி வசதியைப் பெறுவதற்கும் இந்த நிதியாண்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி இல்லை. இந்த ஆண்டு, வாழப்பாடி வட்டம், பேளூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் பயில புதிய மாணவர் விடுதியை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் விடுதி என்பது தனிக் கேள்வியாகக் கேட்கப்படவேண்டும் என்று இருந்தாலும்கூட, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கள்ளர் சீரமைப்பு என்கின்ற அமைப்பு—வெள்ளையர்கள் காலத்தில், அந்தக் காலத்தில் பிரமலைக் கள்ளர்கள், வெள்ளையர்களுக்கு எதிராக, சுதந்திரப் போராட்டத்திலே மிகப் பெரிய பங்கினைப் பெற்றவர்கள். அவர்கள் போர் வீரர்களாக அன்றைக்கு வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார்கள். அதன் காரணமாக, பெருங்காமநல்லூரில்கூட வெள்ளையர்கள் காலத்திலே ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு காரணமாக 20 பேர்கள் உயிரிழக்க நேர்ந்தது. அப்படிப்பட்ட அந்தத் தியாகிகளுக்காக, அவர்களின் முன்னேற்றத்திற்காக, வெள்ளையர் காலத்திலேயே இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறை ஏற்படுத்தப்பட்டது. இந்தத் துறைக்கு கடந்த நமது ஆட்சிக் காலங்களிலே பல்வேறு நிதிகள் ஒதுக்கப்பட்டு, பல்வேறு பள்ளிகளினுடைய நிலையிலே இயங்கக்கூடிய விடுதிகள் போன்றவற்றிற்கு எல்லாம் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வந்தன. இந்த ஆண்டு, இந்தச் சீரமைப்புத் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது? அதுபோல, இந்தத் துறையின் மூலமாகப் புதிதாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுகின்ற நிலை இருக்கிறதா? அப்படியிருந்தால், எத்தனைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படும்? அதோடு, மாணவர் விடுதிகள் எத்தனை, இந்தத் துறையின் மூலமாக, இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதை அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

2005 மார்ச் 16]

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் இவ்வளவு விரிவான கேள்வி? நீங்கள் தனிக் கேள்விப் போட்டால்தான், விவரம் இருக்கும். (குறுக்கீடு) அமைச்சர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரமலைக் கள்ளர் என்ற சமுதாயத்தினர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் மற்ற மாவட்டங்களில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். பிரமலைக் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள், இடம்பெயர்ந்து, தமிழகத்தின் இதர மாவட்டங்களிலும் மற்றும் இந்தியா முழுவதும் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். மத்திய அரசு, ஒரு சட்டத்தை, 1911 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. மேற்காணும் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களைக் குற்றப் பரம்பரையினர் என ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்டு, விதிகளை மீறி, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்ததால், இந்தச் சமுதாயத்தினர் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டனர். இந்தச் சட்டத்தை எதிர்த்ததால், 3–4–1920–ல், உசிலம்பட்டி அருகேயுள்ள பெருங்காமநல்லூர் என்ற கிராமத்தில், 16 பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆண், பெண்களை, ஆங்கிலேயர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இந்தச் சம்பவம், இந்திய அளவில் அல்லாமல், இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் எதிரொலித்தது. இச் சம்பவத்திற்குப் பின், ஆங்கிலேய அரசு விழித்துக் கொண்டு, மேற்காணும் பிரமலைக் கள்ளர் சமுதாய மக்களை, இங்கிலாந்துப் படைகளால் அடக்க முடியாது என்று கருதி, இந்த இனத்தவருக்குக் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டைச் செய்தால் மட்டுமே இவர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியும் என்ற நோக்கில், 1920 ஆம் ஆண்டு, நவம்பரில், நூற்றுக்கணக்கான பள்ளிகள், விடுதிகள், கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, அவர்களுக்குப் புனரமைக்கக்கூடிய திட்டத்தை அரசு வகுத்தது. அதற்குப் பின்னர், இன்றைக்கு மட்டும், பிரமலைக் கள்ளருக்கு 260 பள்ளிகளும், அதேபோன்று 48 விடுதிகளும் இருந்து வருகின்றன. இதுவரை, கள்ளர் சமுதாயத்திற்கு, சீர்மரபினருக்கு, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மட்டுந்தான், 1920–க்குப் பின்னர், அதிகமாக நிதியொதுக்கி, 2005–2006 ஆம் ஆண்டுக்கு மட்டும் ரூ.20 கோடியே, 11 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளர் பள்ளிகள் கூடுதல் ஆய்வுக் கூடத்திற்கு, ரூபாய் ஒரு கோடியே 12 இலட்சத்து 50 ஆயிரமும், கள்ளர்

பள்ளிகளினுடைய கழிப்பிட வசதிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 82 இலட்சமும், கள்ளர் பள்ளிகளின் 284 கூடுதல் வகுப்பறைகளுக்கு ரூபாய் 8 கோடியே 52 இலட்சமும், கணினிப் பாடத்திற்கான வசதிகளுக்கு ரூபாய் 69 இலட்சமும், கள்ளர் பள்ளிகளினுடைய குடிநீர் வசதிக்கு ரூபாய் 31½ இலட்சமும், பள்ளிகளினுடைய மின் விசிறி மற்றும் விளக்கு வசதிகளுக்கு ரூபாய் 8 கோடியே 40 இலட்சமும், 24 விடுதிகள் ஏற்படுத்துவதற்கு, ரூபாய் 7 கோடியே 56 இலட்சமும், மொத்தமாக ரூபாய் 20 கோடியே 11 இலட்சத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், 1920–க்குப் பின்னர், அதிகமாக நிதியொதுக்கீடு செய்து, அவர்களுடைய வாழ்விற்கு இன்றையதினம் மேம்பாடு செய்வதற்கான திட்டத்தை வகுத்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகப்படியான நிதியை ஒதுக்கித் தந்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பிரமலைக் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள், 3 மாவட்டங்களில் இருக்கின்றவர்களுக்கு மட்டும்தான் மிகவும் பின்தங்கியவர்கள் என்கின்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்களுக்குதான் அந்தச் சலுகை இருக்கிறது. இன்றைக்கு, அரசு உத்தியோகத்தில் இருக்கின்றவர்கள், பல்வேறு தொழில்களைச் செய்கின்றவர்கள், தமிழ்நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும் வாழ்கின்ற ஒரு சூழல் இருக்கிறது. எனவே, அதுபோல மறவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட இடத்திலே வசித்தால்தான், மிகவும் பின்தங்கியவர்கள் என்று கணக்கிடப்படுகிறார்கள். மதுரையிலே அவர்கள் இருந்தால்கூட, அந்தச் சலுகைகள் இல்லை. இன்றையதினம், இராமநாதபுரம், திருநெல்வேலி பகுதிகளிலேயிருந்து நிறைய பேர், மதுரை, சென்னை போன்ற இடங்களிலெல்லாம் வந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த மறவர் சமுதாய மக்களுக்கும், பிரமலைக் கள்ளர் சமுதாய மக்களுக்கும், எங்கிருந்தாலும் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்கள் என்கின்ற சான்றிதழைத் தருவதற்கு அரசு முன்வருமா? அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றால், நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

2005 மார்ச் 16]

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆணையம் ஒன்று இருக்கிறது. அதன்மூலமாக மனு கொடுக்கப்பட்டால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையின்பேரில் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய இனவாரிப் பட்டியலில் வேறு யாரேனும் குற்றப் பரம்பரையினர் இருக்கிறார்களா? அப்படியானால், அவர்களுக்கும் சீரமைப்புப் பள்ளிகள் தொடங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு இருக்கின்ற தேவைகளை வைத்துக்கொண்டு, வருகின்ற காலத்தில் உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதியில் காமராஜபுரம், பாலரங்காபுரம் பகுதிகளில் மறவர் சமூக மக்கள் வசிக்கிறார்கள். சாதிச் சான்றிதழ் பெறவேண்டுமென்றால், இராமநாதபுரத்தில்தான் பெறவேண்டும் என்று மதுரை மாவட்ட அலுவலகத்தில் குறிப்பிடுவதாகக் கூறுகிறார்கள். அவர்களுக்கும் மதுரையிலேயே சாதிச் சான்றிதழ் கிடைப்பதற்கு வழி செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய கருத்தினை, விசாரித்து பரிசீலித்து ஆவன செய்ய முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.